ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நிதா$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ வெண்ணெய்விழுங்கி ॥

*This document*[*] *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வெண்ணெய்விழுங்கி ॥

## வெண்ணெய்விழுங்கி

‡வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை
 வெற்பிடை இட்டு⋆ அதன் ஓசை கேட்கும்⋆
கண்ண பிரான் கற்ற கல்வி தன்னைக்⋆
 காக்ககில்லோம் உன் மகனைக் காவாய்⋆
புண்ணில் புளிப் பெய்தால் ஒக்கும் தீமை⋆
 புரை புரையால் இவை செய்ய வல்ல⋆
அண்ணற் கண்ணான் ஓர் மகனைப் பெற்ற⋆
 அசோதை நங்காய்! உன் மகனைக் கூவாய் (1)

வருக வருக வருக இங்கே⋆
 வாமன நம்பீ! வருக இங்கே⋆
கரிய குழல் செய்ய வாய் முகத்தெம்⋆
 காகுத்த நம்பீ! வருக இங்கே⋆
அரியன் இவன் எனக்கின்று நங்காய்!⋆
 அஞ்சன வண்ணா! அசலகத்தார்⋆
பரிபவம் பேசத் தரிக்ககில்லேன்⋆
 பாவியேனுக்கிங்கே போதராயே (2)

திருவுடைப் பிள்ளை தான் தீயவாறு⋆
 தேக்கம் ஒன்றும் இலன் தேசுடையன்⋆
உருக வைத்த குடத்தொடு வெண்ணெய்⋆
 உறிஞ்சி உடைத்திட்டுப் போந்து நின்றான்⋆
அருகிருந்தார் தம்மை அநியாயம்
 செய்வதுதான்⋆ வழக்கோ அசோதாய்!⋆
வருக என்றுன்மகன் தன்னைக் கூவாய்⋆
 வாழ ஒட்டான் மதுசூதனனே (3)

கொண்டல் வண்ணா! இங்கே போதராயே⋆
    கோயிற் பிள்ளாய்! இங்கே போதராயே⋆
தெண் திரை சூழ் திருப்பேர்க் கிடந்த⋆
    திருநாரணா! இங்கே போதராயே⋆
உண்டு வந்தேன் அம்மம் என்று சொல்லி⋆
    ஓடி அகம் புக ஆய்ச்சி தானும்⋆
கண்டெதிரே சென்றெடுத்துக் கொள்ளக்⋆
    கண்ண பிரான் கற்ற கல்வி தானே (4)

பாலைக் கறந்தடுப்பேற வைத்துப்⋆
    பல்வளையாள் என்மகள் இருப்ப⋆
மேலை அகத்தே நெருப்பு வேண்டிச்
    சென்று⋆ இறைப்பொழுதங்கே பேசி நின்றேன்⋆
சாளக்கிராமம் உடைய நம்பி⋆
    சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான்⋆
ஆலைக் கரும்பின் மொழி அனைய⋆
    அசோதை நங்காய்! உன்மகனைக் கூவாய் (5)

போதர் கண்டாய் இங்கே போதர் கண்டாய்⋆
    போதரேன் என்னாதே போதர் கண்டாய்⋆
ஏதேனும் சொல்லி அசலகத்தார்⋆
    ஏதேனும் பேச நான் கேட்க மாட்டேன்⋆
கோதுகலம் உடைக் குட்டனேயோ!⋆
    குன்றெடுத்தாய்! குடம் ஆடு கூத்தா!⋆
வேதப் பொருளே! என் வேங்கடவா!⋆
    வித்தகனே! இங்கே போதராயே (6)

செந்நெல் அரிசி சிறுபருப்புச்⋆
    செய்த அக்காரம் நறுநெய் பாலால்⋆
பன்னிரண்டு திருவோணம் அட்டேன்⋆
    பண்டும் இப் பிள்ளை பரிசறிவன்⋆
இன்னம் உகப்பன் நான் என்று சொல்லி⋆
    எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்றான்⋆

உன்மகன் தன்னை அசோதை நங்காய்!⋆
    கூவிக் கொள்ளாய் இவையும் சிலவே (7)

கேசவனே! இங்கே போதராயே⋆
    கில்லேன் என்னாதிங்கே போதராயே⋆
நேசம் இலாதார் அகத்திருந்து⋆
    நீ விளையாடாதே போதராயே⋆
தூசனம் சொல்லும் தொழுத்தை மாரும்⋆
    தொண்டரும் நின்ற இடத்தில் நின்று⋆
தாய் சொல்லுக் கொள்வது தன்மம் கண்டாய்⋆
    தாமோதரா! இங்கே போதராயே (8)

கன்னல் இலட்டுவத்தோடு சீடை⋆
    கார் எள்ளின் உண்டை கலத்தில் இட்டு⋆
என் அகம் என்று நான் வைத்துப் போந்தேன்⋆
    இவன் புக்கவற்றைப் பெறுத்திப் போந்தான்⋆
பின்னும் அகம் புக்குறியை நோக்கிப்⋆
    பிறங்கொளி வெண்ணெயும் சோதிக்கின்றான்⋆
உன்மகன் தன்னை யசோதை நங்காய்!⋆
    கூவிக் கொள்ளாய் இவையும் சிலவே (9)

சொல்லில் அரசிப் படுதி நங்காய்!⋆
    சுழல் உடையன் உன் பிள்ளை தானே⋆
இல்லம் புகுந்தென் மகளைக் கூவிக்⋆
    கையில் வளையைக் கழற்றிக் கொண்டு⋆
கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற⋆
    அங்கொருத்திக்கவ் வளை கொடுத்து⋆
நல்லன நாவற் பழங்கள் கொண்டு⋆
    நான் அல்லேன் என்று சிரிக்கின்றானே (10)

‡வண்டு களித்திரைக்கும் பொழில் சூழ்⋆
    வருபுனல் காவிரித் தென்னரங்கன்⋆
பண்டவன் செய்த கிரீடை எல்லாம்⋆
    பட்டர்பிரான் விட்டுசித்தன் பாடல்⋆

கொண்டிவை பாடிக் குனிக்க வல்லார்⋆
 கோவிந்தன் தன் அடியார்கள் ஆகி⋆
எண் திசைக்கும் விளக்காகி நிற்பார்⋆
 இணையடி என்தலை மேலனவே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥